செய்தி வெளியீடு எண்: 414 நாள்: 22.05.2010

**பத்திரிகைச் செய்தி**

ஹஜ் 2010–ற்காக, தமிழ் நாட்டைச் சேர்ந்த பயணிகளிடமிருந்து 12,081+23(குழந்தைகள்) விண்ணப்பங்கள் தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவால் பெறப்பட்டுள்ளன. ஆனால், மும்பை, மத்திய ஹஜ் குழுவினால் அளிக்கப்பட்ட ஒதுக்கீடு 2994 இருக்கைகள் ஆகும். இம்மாநிலத்திற்கு அளிக்கப்பட்ட ஒதுக்கீடான 2994 இருக்கைகளிலிருந்து, கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து விண்ணப்பித்து தெரிவு செய்யப்படாத பயணிகள் இவ்வருடம் விண்ணப்பித்து சிறப்பு பிரிவின் கீழ் பதிவு செய்துள்ள பயணிகளுக்கு 202 இருக்கைகளை அளிக்குமாறும், பின்னர் குலுக்கல் மூலம் 2792 பயணிகளை இக்குழு தெரிவு செய்ய வேண்டுமென்று, மும்பை, மத்திய ஹஜ் குழு தெரிவித்துள்ளது

2. மும்பை, மத்திய ஹஜ் குழுவினால், ஹஜ் 2010–ல், தமிழ் நாட்டிற்காக அளிக்கப்பட்ட ஒதுக்கீடான 2792–ன் அடிப்படையில் புனிதப் பயணிகளைத் தெரிவு செய்ய மாவட்ட வாரியாக குலுக்கல் (குறா) நடத்த தமிழ் நாடு மாநில ஹஜ் குழு முடிவு செய்துள்ளது. இந்தக் குலுக்கல் நிகழ்ச்சி, 27–5–2010 (வியாழக்கிழமை) அன்று காலை 10.00 மணியளவில், சென்னை, இராயப்பேட்டை, புதுக்கல்லூரியிலுள்ள, ஆனைக்கார் அப்துல் ஷுக்கூர் கலையரங்கத்தில் நடைபெறும்.

3. ஹஜ் 2010–ற்காக, தமிழ் நாடு மாநில ஹஜ் குழு மூலமாக விண்ணப்பித்துள்ள புனிதப் பயணிகள் இக்குலுக்கலில் (குறாவில்) கலந்து கொண்டு நிகழ்ச்சியினை அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடத்திட ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**கா. அலாவுதீன், இ.ஆ.ப.,**
**உறுப்பினர் மற்றும் செயல் அலுவலர்.**

வெளியீடு: இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 9.